**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**C.C.No. 13/2014**
**Prosecution Witness P.W.2**

.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. கணேசன் | Caste | : |
| Father's name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

நாள் - **10.12.2024.**

**(எதிரி ஆஜர்)**

**<u>முதல்விசாரணை-</u>**

நான் தற்போது விருதுநகரில் குடியிருந்து, போட்டோ கிராபராக தொழில் செய்து வருகிறேன். கடநத 17.05.2001 ம் தேதியன்று விருதுநகர் மின்வாரிய அதிகாரிகள் அழைத்ததன் பேரில் மதுரை அனுப்பானடி பகுதிக்கு வந்தேன். அங்கு வெங்கடேஸ்வரா மாவு மில் மின்இணைப்பு எண்.429 மின்சாரம் திருடப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்து, அங்கிருந்த அமைப்புகளை புகைப்படம் எடுக்க சொன்னார்கள், நான் எடுத்து மதுரை மின்வாரியஅதிகாரிகளிடம் கொடுத்தேன். இது சம்பந்தமாக அவனியாபுரம் காவல்நிலைய அதிகாரிகள் என்னை விசாரித்தனர்.

**<u>குறுக்குவிசாரணை</u>**

விருதுநகரில் இருந்து மதுரைக்கு வருவதற்கு சுமார் 2 மணி நேரம் ஆகும் என்றால் சரிதான். விருதுநகரில் இருந்து திருநெல்வேலி செல்வதற்கு சுமார் 2-1/2 மணி நேரம் ஆகும். எனக்கும், மின்பகிர்மான வாரியத்திற்கும் இடையே எந்தவிதமான ஒப்பந்தமும் கிடையாது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக புகைப்படம் எடுப்பதற்கு மின்வாரியத்தில் இருந்து எந்தவித வேண்டுகோளும் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். சம்பவ இடமாக சொல்லும்

அனுப்பானடிக்கு அதற்கு முன்பு நான் போனதில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக போட்டோ எடுத்ததற்கு பில் போட்ட அடிக்கட்டைகள் எதுவும் இருக்கிறதா என்றால் இல்லை. என்னை இந்த வழக்கு சமபந்தமாக விசாரித்து, என்றைய தேதியில் எத்தனை போட்டோக்கள் எடுத்தேன் என்பது குறித்து விசாரித்து, அதற்குரிய இரசீதுகளையும் பெற்றுக் கொண்டார்கள். அந்த இரசீதுகளை பார்த்தால் நான் முதல்விசாரணையில் சொல்லிய சங்கதியில் ஈடுபட்டேன் என்ற விபரம் தெரிய வரும் என்றால் சரிதான். நான் முதல்விசாசரணையில் சொன்ன போட்டோ நெகடிவ்களை எந்த லேபில் வைத்து டெவலெடப் செய்யப்பட்டது என்பதற்கான சான்றிதழ் 65 பி கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். திருநெல்வேலி மின்வாரியத்தல் இருந்து எனக்கு எந்தவித அழைப்பும் வரவில்லை, அதேபோல் திருநெல்வேலி மின்வாரியத்தை சேர்ந்தவர்களுடன் இந்த வழக்கு சம்பந்தமாக நான் எந்த பயணமும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொன்னது போல், சொன்ன விதத்தில் எந்த புகைப்படமும் எடுக்கவில்லை என்றாலும், மின்வாரிய அதிகாரிகளிடம் கொடுக்கவில்லை என்றாலும், வழக்கில் சாட்சி வேண்டும் என்பதற்காக பின்னிட்டு சாட்சியாக போட்டு காவல்துறை அதிகாரிகள் சொல்லிக் கொடுத்ததன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்
கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

Sd./-xxxx

முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.